புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கொற்கை புதினத்தில் கடல் சார்ந்த வாழ்வியல்

முனைவர்க. சங்கர்,
தமிழ்த்துறைத்தலைவர்,
தொன் போஸ்கோ கல்லூரி,
சோகத்தூர் புறவழிச் சாலை, தருமபுரி,

ஆய்வுச் சுருக்கம்

கடல் சார்ந்த வாழ்வியலை வெளிப்படுத்தக் கூடிய புதினங்கள் தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் நெய்தல் திணை மக்கள் பரதவர் என்றும் உமணர் என்றும் அழைக்கப்பட்டனர். மீன்பிடித்தல், உப்பு விளைத்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்கள் பழங்காலத்திலிருந்தே கடற்கரையோர மக்கள் செய்து வரும் தொழில்களாகவே உள்ளன. கொற்கை புதினமானது கடல் வணிகக் கப்பலில் பணி செய்து வெளிநாடுகளுக்குப் பணப் பயிர்களை கொண்டு சென்று விற்பனை செய்யும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் புதினத்தில் கடல் வார்ந்த வாழ்வியல் கூறுகளில் மீன் பிடித்தலில் ஈடுபடுவதும், முத்துக் குளித்தலில் ஈடுபடுவதும் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. ஜோ.டி.குரூஷ் எழுதிய இப்புதினத்தில் கடல் சார்ந்த மக்களான பரதவர்கள் படகில் சென்று மீன் பிடித்தலில் ஈடுபடுவதைப் பற்றிய பதிவுகளைக் காணமுடிகிறது. அது போல பண்பாட்டு வாழ்வில் அவர்கள் மேற்கொள்ளும் சில தொழில்களாக உப்பு விளைத்தல். முத்துக் குளித்தல் ஆகியன அமைகின்றன. இத்தொழில்களே அம்மக்களின் அடையாளமாக வெளிப்படுகிறது என்பதை இக்கட்டுரை வழி அறிந்து கொள்ளலாம்.

குறிப்புச் சொற்கள்

பரதவர், உப்பு விளைத்தல், முத்துக் குளித்தல், கடல் வணிகம், நாவாய்கள், குமரியன்னை.

## முன்னுரை

மனிதர்கள் வேட்டைச் சமூகமாக இருந்த நிலை மாறி வேளாண்மைச் சமூகமாக மாறிய நிலையில் வேட்டை, வேளாண்மை இரண்டு நிலையிலும் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்களாக நெய்தல் நிலத்தவர்களைக் கருதலாம். வேட்டை என்பது மீன்பிடித்தலாகவும், வேளாண்மை என்பது உப்பு விளைத்தலாகவும் இருந்தது. இவ்விரு தொழில்களையும் சேர்ந்து செய்தவர்கள் ஒரு குடியினரே என்று கொள்ள முடியாது. சங்க காலத்தில் மீன் பிடித்தவர்கள் பரதவர்கள் என்றும் உப்பு விளைவித்து விற்றவர்கள் உமணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். பரதவர்களே உப்பு விளைத்ததாகவும் கூறப்படுவதுண்டு. தற்காலப் புதினங்களில் கடற்கரையோர மக்களின் வாழ்வியலைக் கூறும் பல்வேறு புதினங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. மீன் பிடித்தல், கடல் வணிகம் செய்தல் என்பன பற்றிய பதிவுகளை கப்பல் பணியில் இருந்தவரான ஜோ.டி.குரூஸ் ஆழிசூழ் உலகு, கொற்கை என்ற இரண்டு புதினங்களில் எழுதியுள்ளார். மீன் பிடித்தல் பற்றி விரிவாக ஆழ்சூழ் உலகு புதினத்திலும் கடல் வணிகத்தில் ஈடுபடுதல் பற்றி கொற்கை புதினத்திலும் எழுதியுள்ளார். எனினும் அவரது பதிவுகள் கடல் சார்ந்த வாழ்வியலை எடுத்தியம்பும் வகையில் கடற்கரையோர மக்களின் வெளிகளை வர்ணித்து அமைந்திருக்கின்றது. சுடுதான் பாயாக அல்லது கூலித் தொழிலாளியாக கப்பலில் சேர்ந்து தோணிக்கு முதலாளியாக மாறும் காலத்தின் வளர்ச்சியை ஜோ.டி.குரூஸ் சித்தரித்துள்ளார்.

இக்கட்டுரையில் கொற்கை புதினத்தில் கடற்கரையோர மக்களின் வாழ்வியல் பதிவுபெற்றுள்ளமையை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

கடல் சார்ந்த நிலம்

நெய்தல் என்னும் சொல் தறியையே குறித்து நிற்கிறது. கடல் சார்ந்த மக்கள் வலை பின்னி அதனைக் கொண்டு மீன்பிடித்து தம் வாழ்வாதாரத்தை தேடிக் கொள்கின்றனர். "நுளையர், வலையர் என்று சுட்டப்பட்ட பரதவர்கள் கடற்கரைப் பகுதிகளில் கடலில் தொழில் புரிந்து வாழ்ந்தார்கள். திமில் என்றழைக்கப்பட்ட படகுகளில் இரவில் சென்று வலை வீசி மீன்பிடித்து விடியலில் கரை சேர்ந்தார்கள். பிடித்த மீன்களைக் கூறுகட்டி விற்றார்கள்."[1] என்றும் மீன்பிடித்தலும் ஒரு வகையான வேட்டைத் தொழில்தான் என்றும் ராஜ்கௌதமன் குறிப்பிடுகிறார். சுறாவை உளி கொண்டு எறிந்து பிடிப்பதைப் பற்றி சங்கப் பாடல்களில் கூறப்படுவதை எடுத்துக் காட்டி இது வேட்டைச் செயல்தான் எனக் கூறுவர். கடல் சார்ந்த தொழில்களில் முத்தெடுத்தல், சங்கு குளித்தல், உப்பு விளைவித்தல் போன்ற பிற தொழில்களும் செய்யப்படுகின்றன. கப்பல் வணிகத்திலும் கடற்கரையோர மக்கள் ஈடுபடுவர். நாவாய் செலுத்தும் நுட்பம் அறிந்தவர்கள் கடற்காற்றினைக் கொண்டு கப்பலை செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்று நெய்தல் நில மக்களான தமிழர்கள் சுட்டப்படுகின்றனர். கொற்கை துறைமுகமானது மிகப் பழமையானது. பல்வேறு நாடுகளுக்கும் கடல் வழியாகச் சென்று வணிகத்தில் ஈடுபட்டிருக்கின்ற நிலைமையினைக் காணமுடிகிறது. கொற்கைப் புதினத்தில் கடல் சார்ந்த வாழ்வியல் பற்றி கூறப்படும் செய்திகளில் பெரும்பான்மையாக வணிகமே குறிப்பிடப்படுகிறது.

கப்பலில் பணி செய்பவர்கள், கடல் வணிகத்தில் ஈடுபடுவோரின் முதலீடுகள் வியாபாரத்திற்கான செயல்பாடுகள் ஆகியன பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர். எனினும் கடற்கரையோர மக்களைப் பற்றிய வர்ணனைகளையும் காணமுடிகிறது.

கொற்கை புதினத்தில் நாவாய்கள்

சங்க இலக்கியத்தில் சுட்டப்படுகின்ற நாவாய் என்னும் சொல் கடல் வணிகத்திற்குப் பயன்படுத்தப்படும் கப்பலின் பெயராகும். "பொதுவாக நீர்வழிச் செல்லும் பயன்பாட்டுக்குரிய சாதனங்களை நாவாய். வங்கம், பஃறி, திமில், தோணி என்னும் சொல்லால் புலவர்கள் குறிக்கின்றனர்"[2] என்று குறிப்பிடுவதன் மூலம் கடலில் மீன்பிடிப்பதற்கும் வணிகத்திற்கும் பயன்படுத்தும் பல்வேறு கடல் சார்ந்த சாதனங்கள் கூறப்படுகின்றன. பல்வேறு கப்பல்கள், படங்குகள், தோணிகள், மரக்கலங்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பினும் நாவாய் என்பது கடல் வணிகத்திற்கான கப்பல் என்பது உறுதியாகிறது. கொற்கை புதினத்தில் கடலில் நாவாய் என்றெ கப்பல் அழைக்கப்படுகிறது. "நாவாயின் அணியத்திலிருந்து கடலிலிறங்கிய நங்கூரக் கயிற்றைச் சுற்றியபடி போக்குக் காட்டிய கெழுத்தி மீன் கூட்டம் காலைக் கதிரோனொளியில் தகதகவென மின்னியது. சிறகடித்துப் பறந்து நாவாயைக் கடந்தது கடற் புறாக் கூட்டம். அவைகளிலொன்று நாவாயின் தன் மரத்திலமர்ந்து அலகு நீட்டி அழகு காட்ட மற்றவை கடல் மேற்பரப்பில் இரை தேடி மிதந்தசைந்தன" (கொற்கை.15) என்று நாவாய் கடலில் மிதப்பதையும் அணியத்திலிருந்து அதாவது கடற்கரையின் அருகிலிருந்து நகர்ந்து செல்லும் கப்பலை பறவைகள், மீன்கள் தடுத்துச் செல்வதையும் காணமுடிகிறது.

மீன்பிடித்தலும் விற்றலும்

கடலில் மீன் பிடித்தல் முதன்மையானத் தொழிலாகக் கொண்டவர்கள் பரதவர்கள் ஆவர் "கடற்கரைப் பகுதி மக்களான பரதவர் வாழ்க்கைக்கு இவ்விரண்டு தொழில்களும் உயிர்நாடியாக இருந்தன. பரதவர்கள் ஆழ்கடலுக்குள்ளே சென்று நிறைய மீன்களைப் பிடித்துப் படகுகளில் ஏற்றித் திரும்புவதைப் பல சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றனர்.... கடல் நீரைத் தேக்கி உப்பு எடுத்து உள்நாட்டுக்கு விற்க அனுப்புவதும் இவர்களால் மேற்கொள்ளப்பட்டது."[3] பரதவர்களின் இன்றியமையாத தொழிலாக மீன் பிடித்தல் இருப்பது பற்றிக் கூறப்படுகிறது. மீன்பிடித் தொழிலாளர்கள் வலைக்குடியினர் என்று கூறப்படுகின்றனர். வலையர் என்ற சொல் வழக்கத்தில் இருக்கிறது. வலையர் என்பது வலை கொண்டு மீன் பிடிப்பவர்களைக் குறிக்கும் சொல்லாகும். கடற்கரையோரத்தில் வலைக்குடியினர். பாண்டியபதி இறந்ததைக் கேள்விப்பட்டு சென்றனர் என்று கூறப்படுவதை "பாண்டியபதி மரித்துப் போன செய்தி உடற்கரை ஊர்களெங்கும் காட்டுத்

*தீப் போல் பரவியிருந்தது. வலைக்குடி காளவாசல் கடற்கரையிலும் செய்தி கேள்விப்பட்டவர்கள், வேலைகளைக் கிடந்தது கிடக்கப் போட்டு விட்டுப் வடக்கே குருசடிப் பக்கம் ஓடி வந்தார்கள்.'' (கொற்கை.22) என்ற மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்களின் குடியிருப்புப் பகுதி பற்றிக் கூறப்படுகிறது. மீன் பிடித்து விற்கும் பரதவப் பெண்களை குரங்கு ஒன்று வியாபாரம் செய்ய விடாமல் தொந்தரவு செய்திருக்கிறது. சித்து விளையாட்டுக்களில் விற்பன்னர்களாக இருக்கும் பாண்டியபதி பரதவத் தலைவர், பட்டங்கட்டிகள் அதனை குறிப்பிட்ட நேரங்களில் வெளிக்காட்டத் தவறுவதில்லை. வியாபாரம் செய்ய விடாமல் தடுத்த குரங்கினை சந்தைக்கு வந்த பரதவத் தலைவர் மணப்பாட்டையா சாளைக் கருவாடு ஒன்றினை பெண்களிடம் வாங்கி மஞ்சளை அரைத்து அதன் மேல் பூசி ஊதி விட உயிர் பெற்ற சாளைக் கருவாடு குரங்கினை குதறி விட்டது. அதன் பின்பு பெண்கள் வியாபாரம் எவ்விதத் தொந்தரவும் இல்லாமல் நடைபெற்றது ''எதிர்த் தரப்பு குரங்கு ஒன்றை வைத்துக் கொண்டு பரதவப் பெண்களை மீன் வியாபாரம் செய்ய விடாமல் விரட்டியிருக்கிறது. சந்தையுள்ளே நுழைந்ததுமே அந்தக் குரங்கைப் பார்த்த மணப்பாட்டையா வியாபாரத்துக்காக பரதவப் பெண்கள் கொண்டு வந்திருந்த சம்பைக் கட்டிலிருந்து சாவாளைக் கருவாடொன்றை எடுத்தவர் முனை முறியாத மஞ்சள் துண்டு ஒன்றையும் பெண்களிடம் கொடுத்து அரைத்துக் கேட்டிருக்கிறார். அவர்களும் மஞ்சளை அந்த இடத்திலேயே அரைத்துக் கொடுக்க அரைத்த மஞ்சளை அப்படியே சாவாளைக் கருவாட்டில் தடவி பெருமூச்செடுத்து காய்ந்த கருவாட்டின் வாயில் ஊதி அதை அந்தரத்தில் உருவி விட்டிருக்கிறார். அதுவரையில் அங்குமிங்கும் துள்ளியபடி ஆட்டம் போட்டபடியிருந்த குரங்கைச் செங்குப் பூட்டாகப் பிடித்துக் குதறியிருக்கிறது அந்தக் காய்ந்த சாவாளைக் கருவாடு. அன்றிலிருந்து சிங்கிகுளம் சந்தையில் வியாபாரம் பார்த்திருக்கிறார்கள் பரதவப்பெண்கள்'' (கொற்கை.26) என்று மீன் வியாபாரத்தில் தொழில் போட்டியினால் தொந்தரவு செய்வதையும் அதனை மந்திர தந்திரங்களால் களைவதையும் புதினம் குறிப்பிடுகிறது. இது போல் குட்டிப் பிசாசு, பேயலசு, மந்திரம், சித்து விளையாட்டு ஆகியனவற்றை பாண்டியபதி அரண்மனை கொண்டிருப்பதாக பரவர்களிடம் நம்பிக்கைக் காணப்படுகிறது.*

*மீன்பிடிக்கும் பரதவர்கள் பெரும்பான்மையினர் கிறித்தவர்களாக இருக்கிறார்கள். கடல் தாய் குமரியன்னை என்றாலும் இவர்கள் இயேசுவையும் மரியாளையும் வணங்குபவர்களாக இருக்கிறார்கள். கடலில் தோணி கொண்டு மீன் பிடித்து வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது. மீன்பாடு கிடைப்பதை நீவாடு என்று கூறுகிறார்கள். தோணியில் ஜெபம் செய்து வேலையைத் தொடங்குகிறார்கள். கரவல கட்டி மீன் பிடிப்பவர்களுக்காக பண்பாயளை அவிழ்த்து விட்டு தோணியை கொண்டு வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது. ''ஆத்தா புண்ணியத்துல ஆத்துவாய கடந்தாச்சில்ல. அப்ப அந்த பண்பாயளையும் அவுத்து வுட்டுருங்கல. அது ஒண்ணுமில்ல அங்க கரையள்ல திலாமரம் போட்டு கரவல கெட்டி மீன் புடிக்கிறானுவ. அதுக்கென்ன புடிக்கட்டு – இங்கயும் நீவாடு மோசந்தாம். காணா புடிக்கிறவம் வுட்டாமுன்னு வச்சிக்க அதுக்குள்ள பாஞ்சிறும். பாயி பருவாம் ஒண்ணும் அம்புடாது. கழிஞ்ச வருசம் நம்ம ரிபேரா புதுத் தோணி மாட்டிச்ச. ராவோட ராவா பாயி பருவான கொண்டு போயிற்றானுவளாம். தேரம் விடிஞ்சி பாத்தா தோணியில் சுத்தமா ஒண்ணுமேயில்லியாம்'' (கொற்கை.83) என்ற கூறுவதன் மூலம் கரையோரம் வரும் போது தோணியில் பண்பாயல் எனப்படும் வலையை அவிழ்த்து உள்ளே இழுத்துக் கொள்கிறார்கள் அவ்வாறில்லையென்றால் கரைவலயில் அனைத்தும் சென்று விடும் பிறகு மீன்கள் இருக்காது என்று கூறப்படுகிறது. கரையோரம் நடைபெறும் மீன்பிடியும், கடலுக்குச் சென்று நடைபெறும் மீன் பிடியும் பற்றி இதில் கூறப்படுகிறது.*

*மீன் பாடுக்குச் செல்லும் போது ஜெபிக்கும் வழக்கம் கொண்டவர்களாக பரதவர்கள் இருப்பதை, ''தோணியில் ராச் செபத்துக்கு மணிடியத்தார்கள். மூசாப்பு இறங்கியிருந்ததால் வானம் கறுத்து நட்சத்திரங்களும் தெரியவில்லை. லெஞ்சின் ஜெபமாலை படிக்க மற்ற அனைவரும் பதில் ஜெபம் படித்தார்கள். காணா பிடித்த சூசமுத்தையும் அணியத்தில் நின்று கூர் பார்த்தவனையும் தவிர மற்றவர்கள் எல்லோரும் அணியத்து அவித்தியால் வலையள்ல வந்து முழந்தாளிட்டார்கள்'' (கொற்கை.84) என்று தோணியில் ஜெபம் கூறுவதும் வழிபாட்டில் ஈடுபடுவதும் பற்றிக் கூறப்படுகிறது. ''தோணியில் ஜெபமாலை படிப்பது அந்தக் நாளிலிருந்தே நடைமுறையிலிருந்த வழக்கம். ஜெபமாலை சொல்லாமல் தோணியில் ராச்சாப்பாடு கிடையாடு'' (கொற்கை.84) என்று கூறப்படுவதில் மீன் பிடிப்போரின் நம்பிக்கை வெளிப்படுகிறது. கிறித்தவ சமயத்தைக் கடைபிடித்து வரும் போது அச்சமயக் கட்டுப்பாடுகளை வழிபாடுகளை அன்றாடம்*

*கடைபிடிக்கும் நிலை தோணியில் மீன் பிடிக்கச் சென்றிருக்கும் போதும் காணப்படுகிறது. மீன் பிடித்தலுக்காகச் செல்பவர்களுக்குக் கடலில் பல்வேறு இடர்ப்பாடுகள் நேரும் என்பதைப் புதினத்தின் வழி உணர முடிகிறது.*

*மறவர் – பரதவர் உறவு*

*இனக்குழுக்களிடையே நிலவும் பல்வேறு உறவுமுறைகளில் மறவர், பரதவர்களிடையே பங்காளி உறவு முறை நிலவுகிறது. அதற்குக் காரணமாகக் கூறப்படும் கதையொன்றில் ஆப்பநாட்டு மறவர் பெண்ணொருத்தியை நாயக்கர் ஆட்சி காலத்தில் நாயக்க மன்னனின் தம்பி விரும்பி அப்பெண்ணைத் துரத்தியிருக்கிறான். அவளோ அச்சம் கொண்டு பாண்டியபதி அரண்மனையில் தஞ்சம் புகுந்தாள். பாண்டியபதி மன்னன் அப்பெண்ணைத் தம் குழந்தை போல் பாவித்து பாதுகாத்து அவளது பெற்றோரிடம் அனுப்பி வைத்ததாகக் கூறப்படுகிறது. இதனால்தான் பாண்டியபதி, நாயக்க மன்னர்களுக்கு இடையே உறவு சீரழிவுக்கு உட்பட்டு பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இச்செய்தியை அடிப்படையாகக் கொண்டு பரதவ மக்களுக்கும் மறவர்களுக்கும் இடையே பங்காளி உறவுமுறை நிலவுகிறது என்கிறார் ஆசிரியர் "காலங்காலமாக ஆப்ப நாட்டு மறவர்களுக்கும் பரதவர்களுக்கும் பங்காளி உறவு முறை இருந்து வந்திருக்கிறது. பரதவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் வேளைகளில் ஊர்க்காவலை நம்பி மறவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போவார்களாம். இது தவிர்த்து இவர்களின் உறவு பலப்படுவதற்கு மற்றுமொரு காரணமிருப்பதாக செவிவழிச் செய்தியொன்று உண்டு. அந்தக் காலத்தில் மறவப் பெண்ணொருத்தியின் அழகில் மயங்கி மதுரை நாயக்க மன்னனின் இளவல் அவளைத் துரத்திக் கொண்டே வந்ததாகவும் பயந்தபடி ஓடி வந்த அவள் பாண்டியபதி அரண்மனைக்குள் நுழைந்து விட பாண்டியபதி அவளைப் பெற்றக் குழந்தை போல் பேணிக் காத்து, பின் பெற்றவரிடமே திருப்பி அனுப்பியதாகவும் சொல்கிறார்கள்" (கொற்கை.29) என்று கூறப்படுகிறது. இவ்வாறு இரு இனக்குழுக்களிடையே உள்ள உறவுமுறை பலப்படுவதற்குப் பெண்களிடம் நடந்து கொண்ட முறை காரணமாக இருக்கிறது.*

*உப்பு வயல்கள்*

*கடற்கரையோரங்களில் மக்கள் பாத்திகட்டி உப்பு விளைவிப்பது வழக்கமான ஒன்றாகும். உப்பு விளைவித்தல் பற்றி சங்க இலக்கியத்திலும் அதற்குப் பிந்தைய இலக்கியங்களிலும கூறப்படுகின்றன. உப்பு விளைவிக்கும் வயல்கள் ஆதலின் உப்பு வயல் என்ற பதமே கூறப்படுகிறது. "நுரை பூத்துக் கிடந்தது. வடதுறை, திட்டுத் திட்டாய் உமணரின் உப்பு வயல்கள். பாத்திகளில் உப்புப் படிமங்கள் மேல் கதிரவனின் வர்ண ஜாலம். வெண்குன்றுகளாய் உப்புக் குவியல்கள். குயிலூடே பொதி சுமந்து ஊறும் இரட்டை மாட்டு வண்டிகள்" (கொற்கை.15) என்று கூறப்படுகிறது.*

*முத்தெடுத்தல்*

*கடற்கரையில் மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் போல கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதைப் போல முத்தெடுக்கும் தொழிலும் நடைபெறும். இதனை முத்துக் குளித்தல் என்று கூறுவார்கள். "முத்துக்குளிக்கும் முக்கிய இடங்களில் உலகில் சிலவே உள. பாரசீக வளைகுடா, இந்தியாவின் தூத்துக்குடிக் கடல்..."[4] என்று முத்துக்குளிக்கும் இடங்களில் ஒன்றாக தூத்துக்குடி அமைகிறது. முத்துக் குளித்தலுக்கும் அதற்கென ஆட்கள் இருப்பார்கள். சிறிய வள்ளங்களில் சென்று சிப்பிகள் இருக்கும் இடத்தில் மூழ்கி முத்தெடுத்து அதனை கரையில் சேர்த்து. ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் கொற்கை துறைமுகத்தில் முத்துக் குளித்தல் நடைபெற்றமையையும் அதனை ஏலத்திற்கு எடுத்து முத்துக்களை விற்பனைக்குக் கொண்டு செல்லும் வகையில் முத்துச் சிலாபம் நடைபெறுவதையும் கொற்கை புதினத்தில் ஆசிரியர் சுட்டுகிறார். "மலையாள கடற்கரையிலிருந்து வந்த தோடைகளுக்கும் வத்தைகளில் தொழில் செய்து பழக்கப்பட்டிருந்ததால் கட்டுமரங்களை விட வள்ளங்களில் தொழில் செய்வது பிடித்திருந்தது. அரையில் கட்டியிருந்த அரச்சாலோடு வந்த குழியாட்கள் தெற்கு நோக்கித் திரும்பி கொற்கைச் சந்தன மாரித் தாயை வணங்கிப் பின் வள்ளங்களில் ஏறினார்கள்"*

*(கொற்கை.185) என்று முத்துக் குழிக்கும் குழியாட்கள் வள்ளங்களில் அதிகாலையில் வணங்கி விட்டுச் செல்வது பற்றிக் கூறப்படுகிறது. முத்து எடுக்கும் விதம் குறித்து “மரவீட்டுப் பக்கமிருந்த தொட்டியை நாலைந்து சுதேசிகள் இறங்கிக் கிண்ட காற்றுவாக்கில் குடலைப் பிடுங்கும் நாற்றம் வந்தது. முத்துச் சிலாபத்தில் நாள்தோறும் அரசாங்கத்துக்கு வரும் சிப்பிகளைத் தொட்டிகளில் போட்டு வைத்துக் காவலுக்கு குதிரைப் போலிசார் நிற்பது வழக்கம். சிப்பிகள் இறந்து அழுகி வெடித்து நாற்றமெடுக்கும். பின் கடற்கரைப் பருமணலை அள்ளி உள்ளே போட்டு சுதேசிகள் பிசைவார்கள். அழுகிய சதைக்குள்ளிலிருந்து முத்துக்கள் வெளியே வரும்.” (கொற்கை.185-186) என்று குறிப்பிடப்படுகிறது. முத்து எழுத்த பின் சிப்பிக் கூடுகளை குவித்து வைத்து விடுவார்கள். அதனை சுண்ணாம்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்துவார்கள் எனவும் கூறப்படுகிறது.*

*கடலுக்குள் குழிக்கும் ஆட்களும், அவர்களுக்குத் துணையாக நிற்கும் தோடையாட்களும் சேர்ந்துதான் முத்துக் குழித்தலில் ஈடுபடுகின்றனர். குழியாட்களை விட தோடையாட்கள்தான் முக்கியமானவர்கள் எனக் கூறப்படுகின்றனர். “குழியோடிகளை விட வள்ளங்களில் செல்லும் தோடைகளின் வேலை மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டது. குழிகல்லைப் பிடித்தபடி தலைகீழாகப் பாய்ந்து பயணிக்கும் குழியாள் தரை தட்டியவுடன் கல்லை விட்டு விடுவான். கல்லை மளமளவென மேலிழுத்து வள்ளத்தில் வைத்து கவனம் தவறாமல் காத்திருக்க வேண்டும். குழியாட்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட நேரம் வரை மூச்சு நிற்கும். அதைக் கவனித்து மேலிருந்து சத்தம் கொடுக்க வேண்டும். சத்தம் தப்பி விட்டால் மூச்சுத் திணறி மேலே வருபவர்களைக் காப்பாற்ற வேண்டும். குழியாட்களைக் காப்பாற்றுவதில் பெரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும். மூச்சடக்கி மேலே வருபவர்கள் சுயநினைவு தப்பி மேலே வருவார்கள். தளர்ச்சியில் நீந்த வலுவில்லாமலிருப்பான். பாய்ந்து உச்சந்தலை முடியைப் பிடிக்கும் தோடை, சோர்ந்தவனை சுயநினைவுக்குக் கொண்டு வர பிடரியில் ஒரு அடி கொடுப்பான். அந்த அடியை வாங்கிய பின்தான். அவனுக்கு மூச்செடுக்க ஞாபகமே வரும்.” (கொற்கை.188) என்று முத்துக் குழிப்பது பற்றிய நுணுக்கங்களையும் தோடை என்பவரின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கிறார் ஆசிரியர். சிலருக்கு மூழ்கும் போது காது வெடித்து ரத்தம் வரக் கூடும்.*

*முத்துக் குழிப்பதைப் போல கடலில் கிடைக்கும் பவளப்பாறை விரல் சல்லிகளையும் சுண்ணாம்புக் காளவாசலில் சுண்ணாம்பு தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் குறிப்பிடுகிறார் “சங்கு மால் பக்கம் வள்ளங்கள் ஒவ்வொன்றாய் கரை பிடித்தன. கூடைகளில் பவளப்பழை விரல் சல்லிகளை எடுத்து வந்த கரைகளில் கொட்டினார்க்ள. எல்லாமே சுத்தமான சுண்ணாம்பு” (கொற்கை.189) என்று கூறப்படுகிறது. இவ்வாறு கடல் சார்ந்த பல்வேறு தொழில்கள் குறித்து கொற்கை புதினத்தில் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். ஆயினும் இப்புதினத்தில் முதன்மையாக விளங்குவது கப்பல்களில் வணிகம் செய்வதாகும்.*

*முடிவுரை*

*நெய்தல் நிலம் என்பது சங்க காலத்திலிருந்து கடல் சார்ந்த மக்களைக் குறித்து நிற்கிறது. கடல் சார்ந்து பல்வேறு தொழில்களில் மக்கள் ஈடுபடுகின்றனர். மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் என்பவை முதன்மையான தொழில்களாக இருந்தாலும், மீன்பிடித்து விற்பதில் உள்ள சிக்கல்கள் பற்றியும் அதில் இருக்கும் போட்டி, பொறாமை பற்றியும் கொற்கை புதினத்தில் பரதவர்களுக்கும் பிற இனக்குழுகளுக்கும் இடையிலான உறவுறுகள் பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றன. அது போல கடல் சார்ந்த முத்தெடுத்தல், சங்கு குழித்தல், முத்துக் குழித்தலில் தோடை என்போரின் பங்கு ஆகியன பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றன.*

*அடிக்குறிப்புகள்*


1. *ராஜ்கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப.124, தமிழினி பதிப்பகம், சென்னை, 2006.*
2. *அ.கா.பெருமாள் (தொ.ஆ), கானலம் பெருந்துறை, ப.21 தமிழினி பதிப்பகம், சென்னை, 2005.*
3. *தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம் வாழ்வியல், ப.155-156*
4. *ஜெ.பாலன், சங்கறுக்கும் எங்கள் குலம், ப.76, நெய்தல் நிலம் பதிப்பகம், சென்னை, 1982*
5. *ஜோ.டி குரூஸ், கொற்கை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில். 2013.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********